# பண்டார் துன் ரசாக் வட்டாரத்தில் அந்நிய நாட்டவர்களின் அங்காடி கடைகள் உடைப்பு



கோலாலம்பூர், செப். 6-

பண்டார் துன் ரசாக்கில் அங்காடி கடைகளை அமைத்து சட்டவிரோதமாக வியாபாரம் செய்து வந்த 7 கடைகளை கோலாலம்பூர் மாநகர மன்ற அதிகாரிகள் உடைத் தெறிந்தனர்.

டேசா தாசேக், ஜாலான் தாசேக் செலாத்தான் 20, பண்டார் தாசேக் செலாத்தான் ஆகிய இடங்களில் இந்த அந்நிய நாட்டவர்கள் அங்காடி கடைகளை அமைத்து வியாபாரம் செய்து வந்தனர்.

அங்கிருந்த மேசைகள், நாற்காலிகள், கூடாரங்கள், எரிவாயு தோம்புகள் மற்றும் ஒரு வியாபாரத்திற்கான சாதனங்கள் அனைத்தையும் அதிகாரிகள் கைப்பற்றினர்.

அதே போல புக்கிட் ஜாலில் மேற்கொள்ளப்பட்ட ஒரு நடவடிக்கையில் ஒரு பழ அங்காடி கடையும் அகற்றப்பட்டது. கைப்பற்றப்பட்ட பொருட்கள் தாமான் மிஹார்ஜா செராஸில் உள்ள கிடங்கிற்கு கொண்டு செல்லப்பட்டது. கோலாலம்பூரில் உள்ள 11 நாடாளுமன்ற தொகுதிகளில் அதிகாரிகள் தொடர்ந்து சோதனை இட்டு இது போன்ற சட்டவிரோத நடவடிக்கைகளை தடுத்து நிறுத்துவர் என்றும் அறிவிக்கப்பட்டது.